மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்குக் கூட கேள்வி நேரத்தின் போது தெரிவித்திருக்கிறேன். பல்வேறு நீர்ப்பாசன ஆதாரங்களையும் தமிழகத்திலே மேம்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் -நம்மிடத்திலே நிதி ஆதாரம் இல்லை என்ற காரணத்தினாலே -இன்றைக்கு உலக வங்கியை அணுகி 4 மாத காலத்திலே 804 கோடி ரூபாயை பெற்றுத் தந்திருக்கின்ற அந்த ஒப்பற்றத் தலைவி, புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் இது போன்ற பிரச்சினைகள் நிதி ஆதாரம் காரணமாக தடைபட்டு போகக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை 5 ஆண்டு காலத்திற்கு செயல்படுத்த இருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 170 கோடி ரூபாய் செலவழிக்க இருக்கிறோம் நம்முடைய நிதியைத் தவிர, இப்படிப்பட்ட திட்டங்களுக்கு, நிதி ஆதாரங்கள் இல்லாத திட்டங்களை எடுப்பதற்காகத்தான் அந்த புதிய திட்டம். ஆகவே இனி வரும் காலங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்ற போது ரெகுலராக கொடுக்கின்ற, அதாவது நாம் ஒதுக்கீடு செய்கின்ற, இந்த அலாட்மெண்டை தவிர, இந்தப் பணியிலே எடுத்துச் செய்வதற்கு பல வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அடுத்த ஆண்டு முதல் இது மாதிரி பிரச்சினைகள் இருக்காது. நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சிக்காலத்திலே பாசன மேம்பாடுகள் அதிகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

31—

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளைச் சீரமைத்தல்.

*9364—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அச்சாலைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாநகரில் மிகவும் மோசமாக உள்ள சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து, மாநகராட்சியின் நிதி நிலைக்கேற்ப சாலை பராமரிப்புப் பணிகள் எடுத்துச் செய்யப்படுகிறது.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: பேரவைத் தலைவர் அவர்களே' மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகள், மதுரை காமராஜர் சாலை, மதுரை இராமநாதபுரம் சாலை, அனுப்பானடி பகுதி, பாதுகாபுரம், சேர்மன் முத்துராம லிங்கர் ரோடு போன்ற ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி நிலைக்கு ஏற்ப அந்தச் சாலைகள் செப்பனிடப்படும் என்று சொன்னார்கள். அது எந்தக் காலத்திலே செய்யப்படும், அதற்கு ஏதேனும் நிதி ஒதுக்கீடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியை அழகு படுத்துகின்ற திட்டத்தை உருவாக்கி அதை நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் 1993 ஆம் ஆண்டு நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்ற காரணத்தினாலே அந்தத் திட்டத்தில் மதுரை மாநகரத்திலே இருக்கின்ற பல்வேறு தார் சாலைகள், மெட்டல் சாலைகள், மண் சாலைகள், கல்தள சாலைகள், கல்தள நடைபாதைகள் எல்லாம் ஒழுங்காகப் பராமரிக்கப்பட்டு சாலைகள் புதுப்பிக்கப்பட இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 7-2-1993 ஆம் ஆண்டு மதுரைக்கு வந்து மதுரையை அழகுபடுத்தும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே

இந்தச் சாலைகள் சம்பந்தமாக ஏற்கனவே சொல்லியபடி குறுகிய காலத்திலாவது இந்த சாலைகளைச் செப்பனிடுவதை உடனடியாக செய்து தரமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சியில் ஏற்கனவே சாலைகளை பராமரிப்பதற்காக 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிதியை வைத்து சாலைகள் பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.பி. சந்திரசேகர்.

முற்பகல் 10-30

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் சாலைகள் பழுதுபடுகின்ற போது அதைச் சீரமைப்பதற்காக நகராட்சியால் ஒரு தொகை நிர்ணயிக்கப்படுகிறது. ஒப்பந்தக்காரர்கள் அந்தத் தொகை போதாது என்ற காரணத்தால் அந்த வேலைகளை எடுத்துச் செய்வதில் சிரமப்படுகிறார்கள். செய்வதில்லை. அதைப் போக்க மாநகராட்சி, நகராட்சிகள் அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு ஒதுக்கப்படுகின்ற அந்தத் தொகையினை அரசு அதிகரிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகள் அதன் அதன் நிதிநிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதியில் இருக்கிற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் என்னிடத்திலே வந்து என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 32, திரு. ம. தனபால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

32—

திருப்போரூரிலிருந்து குடிநீர்த் திட்டத்தை காலவாக்கம் பகுதிக்கு விரிவுபடுத்தல்.

*10432—திரு. ம. தனபால் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் பேரூராட்சியில் காலவாக்கம் பகுதிக்கு திருப்போரூரிலிருந்து குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் விரிவுபடுத்தப்படுமா?